**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129821

1. District : Erode  PS: VEAC, Erode  Year: 2024  FIR No.: 01/AC/2024  Date: 06.01.2024
மாவட்டம்  காவல்நிலையம்  ஆண்டு  மு.த.அ. எண்  நாள்  06.00 Am

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7 (b)
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: —  Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.12.2023  Date to : 04.01.2024
குற்ற நிகழ்வு நாள்  நாள் முதல்  நாள் வரை
Time Period :  Time from : 16.30 hrs  Time to : 09.15 hrs
நேர அளவு  நேரம் முதல்  நேரம் வரை
(b) Information Received at PS. Date : 05.01.2024  Time : 15.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 05.01.2024 GD Vol - I  Time : 15.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  நேரம்

4. Type of Information : Written/ Oral : Written Computer typed (Tamil)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 65 K.M West
Beat Number :  (b) Address : O/o Assistant Engineer, TANGEDCO Chikkarasampalayam, Sathy TK, Erode Dist.
முறைக் காவல் எண்  முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : E. Arun Bharathi  (b) Father's/ Husband's Name : Eswaran (late)
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 42/2024  (d) Nationality : Indian  (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு  நாட்டினம்  வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —  Place of Issue : —
வழங்கப்பட்ட நாள்  வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Agriculturist  (g) Address : D.No. 246 D, Madeswaran Kovil near, Ramabayalur, Chikkarasampalayam (Po) Sathyamangalam Taluk, Erode District.
தொழில்  முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Shanmugam, Foreman, TANGEDCO, Chikkarasampalayam, Sathy Taluk, Erode Dist.
2) Tr. Balasubramanian, Lineman, TANGEDCO, Chikkarasam-palayam, Sathy Taluk, Erode Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது!

— தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

E. அருண்பாரதி
6.1.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 06/01/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.01.2024, 08.00 hrs

Name: பெயர் G. Arumugam.
Rank: நிலை Inspector of Police, V and AC, Erode ...No. எண் ..........

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr. No 1/AC/2024 u/s 7(b) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் 05.01.2024 தேதி மாலை 15.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு. E.அருண்பாரதி, வயது 42, த/பெ. ஈஸ்வரன் (லேட்), க.எண்.246 D மாதேஸ்வரன்கோவில் அருகில், ராமபயலூர், சிக்கரசம்பாளையம் அஞ்சல், சத்தியமங்கலம் தாலூக்கா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் கணிணி தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துபூர்வமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் E.அருண்பாரதி, வயது 42, த/பெ. ஈஸ்வரன் (லேட்), க.எண்.246 D மாதேஸ்வரன்கோவில் அருகில், ராமபயலூர், சிக்கரசம்பாளையம் அஞ்சல், சத்தியமங்கலம் தாலூக்கா, ஈரோடு மாவட்டம், பெறுதல் விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டர், லஞ்ச ஒழிப்பு துறை, கருங்கல்பாளையம், ஈரோடு ஐயா, நான் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலூக்கா, சிக்கரசம்பாளையம் அஞ்சல், ராமபயலூர், மாதேஸ்வரன்கோவில் வீதி, க.எண்.246-ல் வசித்து வருகிறேன். நான் சத்தியமங்கலம் தாலூக்கா, சிக்கரசம்பாளையம் கிராம சர்வே எண்.254-ல் புதிதாக சுமார் 1 ஏக்கர் விவசாய நிலம் என் அம்மா திருமதி.ராஜாமணி அவர்கள் பெயரில் வாங்கி விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி விவசாய பூமியில் நாங்கள் குடியிருக்க வேண்டி சிறிய சிமெண்ட் சீட்டு போட்ட வீடு கட்டினோம். அந்த வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வேண்டி என் அம்மா திருமதி.ராஜாமணி அவர்கள் பெயரில் கடந்த 20.10.2023 ஆம் தேதியன்று விண்ணப்பித்தேன் அதன் எண்.200043631023448 ஆகும். அதற்காக தொகை ரூ.5192/-ஐ மின்சார வாரிய கணக்கில் செலுத்தினேன். அதன் ரசீது எண்.PGNFED2494193 ஆகும். அதனை தொடர்ந்து கடந்த நவம்பர் மாதம் இரண்டு முறை எனது வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி சிக்கரசம்பாளையம் மின் அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோது எங்கள் தோட்ட வீட்டிற்கு அருகில் உள்ள மின் கம்பத்திற்கு அடுத்து உள்ள இரண்டு கம்பங்களுக்கு நடுவில் உள்ள மின் கம்பிகள் தாழ்வாக தொங்கிய நிலையில் இருப்பதால் அந்த கம்பியை சரி செய்ய அந்த இரண்டு மின்கம்பங்களுக்கு இடையில் ஒரு மின் கம்பம் போடவேண்டும் என்றும், அதற்கான மின் கம்பம் மற்றும் மின் கம்பி வந்தவுடன் சொல்கிறோம் என்று கூறினார்கள். கடந்த 25.12.2023 ஆம் தேதியன்று மின் அலுவலக ஊழியர்கள் போர்மேன் சண்முகம் லைன்மேன் பாலசுப்பிரமணியன் ஆகியோர்களுடன் பிற மின் ஊழியர்களும் சேர்ந்து மேற்படி மின்கம்பி தொங்கும் இடத்தில் மின் கம்பம் ஒன்றை புதிதாக போட்டு மின் கம்பிகளை இழுத்து கட்டிவிட்டு மின் கம்பத்தில் மட்டும் மின் இணைப்பு கொடுத்து விட்டு அடுத்தநாள் வந்து எங்கள் தோட்ட வீட்டில் மீட்டரை பொருத்தி மின் இணைப்பு கொடுத்து விடுவதாக கூறிவிட்டு சென்றார்கள். அதனை

தொடர்ந்து 27.12.2023 ஆம் தேதி சாயங்காலம் சுமார் 4.10 மணிக்கு லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்கள் அவருடைய செல் எண்.98434 82779-லிருந்து என்னுடைய செல் நெம்பர் 98422 22117-க்கு மிஸ்டு கால் வந்ததால் நான் மீண்டும் அவரை தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது நான் அவரிடம் எனது மின் இணைப்பு பற்றி விசாரித்தபோது அதுசம்மந்தமாக போர்மேன் அவர்களை வந்து பாருங்கள் என்று சொன்னார். நானும் வந்து பார்ப்பதாக சொன்னேன். அன்று சாய்ந்தரம் சுமார் 4.30 மணிக்கு போர்மேன் சண்முகம் அவர்கள் அவருடை செல் எண் 82486 25851 என்ற எண்ணிலிருந்து எனது தங்கையின் வீட்டுக்காரர் திரு.வெங்கடாசலமூர்த்தி அவர்களின் செல்போன் எண் 98426 85562 என்ற எண்ணிற்கு போன்செய்து அவரிடம் மச்சான் அருண்பாரதி வீட்டிற்கு அருகில் மின்கம்பம் போட்டுவிட்டதாகவும், அதற்கான செலவு ரூ.5000/- ஆனது என்றும், அதனை லைமேன் பாலசுப்பிரமணியன் அவர்களிடம் என்னை கொடுக்கச் சொல்லுமாறு சொல்லியுள்ளார். இந்த விபரத்தை மாமா வெங்கடாசலமூர்த்தி என்னிடம் கூறினார். மேலும் 01.01.2024 ஆம் தேதி வரை என்வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்காததால், மீண்டும் 02.01.2024 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு சிக்கரசம்பாளையம் மின் அலுவலகம் சென்றபோது எனக்கு தெரிந்த அங்கிருந்த லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னை உதவி பொறியாளர் அவர்களை பார்க்கும்படி சொல்லி அவரிடம் அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினார். உதவி பொறியாளர் அவர்கள் என்னை விசாரித்துவிட்டு அவருடைய பதிவேட்டை பார்வையிட்டு விட்டு, அடுத்தநாள் மீட்டரை பொருத்தி மின் இணைப்பு கொடுத்து விடுவார்கள் என்று என்னிடம் கூறினார். நானும் சரியென்று அந்த அலுவலகத்தை விட்டு வெளியே வந்தபோது லைமேன் பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னை அனுகி போர்மேன் அவர்களை பார்த்துவிட்டு போங்கள் என்று கூறி அழைத்து சென்றார். நானும் போர்மேன் சண்முகம் அவர்களை அந்த அலுவலகத்திலேயே பார்த்தேன். அப்போது லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னை அவரிடம் அறிமுகப்படுத்தினார். அப்போது அவர் உங்கள் மின் இணைப்பு கொடுப்பதற்காக உங்கள் வீட்டு அருகில் மின்கம்பம் போடுவதற்கு செலவு நிறைய ஆகிவிட்டது நீங்கள் ரூ.7000/- கொடுங்கள் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் நீங்கள் ரூ.5000/-ம்தான் என் மச்சானிடம் கேட்டீர்கள் இப்போது தொகை அதிகமாக கேட்கிறீர்கள் கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி ரூ.6000/- கொடுத்து விடுங்கள் என்று சொல்லி, கொண்டுவந்திருந்தால் கொடுத்து விடுங்கள் என்று சொன்னார். நான் கொண்டு வர வில்லை பணம் ரெடி செய்து நாளை காலை கொடுத்து விடுகிறேன் என்று சொன்னேன். அப்போது அவர் அருகில் இருந்த லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்களை என்னிடம் காண்பித்து அவரிடம் நாளை காலை இந்த பணத்தை கொடுத்து விடுங்கள் நான் பெற்றுக் கொள்கிறேன் என்று கூறினார். நானும் சரியென்று கிளம்பினேன் அப்போது அருகில் இருந்த லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்களிடம் நாளை காலை பணம் கொண்டுவந்து கொடுத்து விடுகிறேன், லேட் பண்ணாம மீட்டர் பெட்டி மாட்டி கனெக்சன் கொடுத்து விடுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் முடிந்தால் இன்று சாய்ந்திரத்திற்குள் மாட்டி மின்

இணைப்பு கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். நானும் சரி சென்று சொல்லி கிளம்பி சொந்த வேலையாக வெளியில் இருந்தேன் அப்போது மாலை சுமார் 4.30 மணிக்கு லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னிடம் போனில் தொடர்பு கொண்டு அவர் சொன்னபடி என் தோட்டத்தில் உள்ள வீட்டிற்கு மீட்டர் பெட்டி வைத்து மின் இணைப்பு கொடுத்து விட்டதாகவும் கூறி ஏற்கனவே பேசினது போல் நாளைக்கு வந்து ஆபீஸில் என்னை பாருங்க என்று சொன்னார். நானும் சரிஎன்று சொன்னேன். நான் வீட்டிற்கு வந்து பார்த்தபோது என்வீட்டில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் போர்மேன் சண்முகம் மற்றும் லைன்மேன் பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் மின் இணைப்பு கொடுக்க கேட்ட பணம் ரூ.6000/-ஐ கொடுக்க நான் அவர்களை பார்க்க செல்லவில்லை அடுத்த நாள் 04.01.2024 தேதி காலை சுமார் 9.15 மணிக்கு எனது தோட்ட வீட்டிலிருந்து சத்தியமங்கலம் மார்கெட் நோக்கி சிக்கரசம்பாளையம் EB ஆபீஸ் வழியாக எனது பைக்கில் சென்று கொண்டிருந்தபோது லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னை செல்போனில் தொடர்பு கொண்டார். நான் EB ஆபீஸ் பக்கத்தில் போய்கொண்டிந்ததால், நேரில் சென்று லைன்மேன் அவர்களை பார்க்கலாம் என்று சிக்கரசம்பாளையம் EB ஆபீஸ்க்குள் நுழைந்தபோது அங்கு லைன்மேன் பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னிடம் என்ன நேத்தே பணம் ரூ.6000/- கொடுத்து விடுவதாக சொன்னீங்க, என்னாச்சு போர்மேன் கேட்டாரு என்று சொன்னார். அதற்கு நான் பூ வித்த காசு இன்னும் வரவில்லை என்றும், வருகின்ற சனிக்கிழமை பணம் வந்துவிடும் என்றும், சனிக்கிழமை (06.01.2024) பணம் ரூ.6000/- கொடுத்து விடுவதாக சொன்னேன். அவரும் சரியென்று சொல்லிவிட்டு போர்மேனை பார்கிறீங்களா என்று கேட்டு விட்டு சரி நானே தகவல் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லி என்னை அனுப்பிவைத்தார். அதன் பின்பு நான் யோசித்து பார்த்ததில் எங்களது தோட்டத்து வீட்டிற்கு EB சர்வீஸ் கொடுத்ததற்காக லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே லஞ்சமாக ரூ.6000/-ம் கேட்கும் போர்மேன் சண்முகம் மற்றும் லைன்மேன் பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (E.அருண்பாரதி) 05.01.2024 ஈரோடு 05.01.2024.

Sir, Received the above said tamil computer typed complaint on 05.01.2024 at 15.30 hrs. Sd/- (xxxxxxxx) 05.01.2024 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, Chennai. I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2024 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 against the accused Tr.Shanmugam, Foreman and Tr.Balasubramanian Lineman today on

06.01.2024 at 06.00 hrs Sd/- (xxxxxxxx) 06.01.2024 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.E.Arunbharathi age 42, s/o Easwarn (late), D.No.246 D Madeswaran kovil near, Ramabayalur, Chikkarasampalayam post, Sathyamangalam taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

06/01/2024

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.